1975 அக்டோபர் 25]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பெரிய உப்பளங்களை அரசுத் துறை மூலமாக அல்லது கூட்டுத் துறை மூலமாக விரிவாக வளர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கேள்வி தூத்துக்குடி, அதைச் சுற்றியுள்ள பகுதியைப் பற்றியது, மகாபலிபுரத்திலும், வேதாரண்யத்திலும் அரசு ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

திரு. எஸ். வடிவேல்: வேதாரண்யத்தில் ஏறத்தாழ 10 லட்சம் மூட்டை தேங்கியிருக்கிறது. அவ்வாறு தேங்கியிருப்பதை உடனடியாக வாகனில் அனுப்பி, அங்குள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க துரித நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தனிக் கேள்வி போடவும்.

Manufacture of Calcium Carbide

*58 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state:

(a) whether it is a fact that the Tamil Nadu Industrial Development Corporation proposes to set up a Calcium Carbide project in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கால்சியம் கார்பைடு உற்பத்தி செய்வதற்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஒரு அனுமதி கடிதம் பெற்றது. அதன் பிறகு சாதகமான சூழ்நிலைகள் இல்லாததால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது உசிதம் இல்லை என தீர்மானிக்கப்பட்டது.

திரு. என். கே. பழனிசாமி: இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்று திட்டமிடப்பட்டது? என்ன காரணத்தால் இதில் லாபம் இல்லை என்று கைவிடப்பட்டது? இதைத் தனியார் எடுத்த நடத்துவதாக இருந்தால் உதவி செய்ய சர்க்கார் முன்வருமா?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The Scheme need not be considered for the following reasons :

(i) The major outlet for the Calcium Carbide was the PVC producers. The cost of PVC has since gone down considerably and possibilities of PVC producers purchasing Calcium Carbide for manufacture became doubtful;

(ii) The present demand for the Calcium Carbide is about 48,000 tonnes, whereas the total quantity available for sale in 1975-76 will be about 93,000 tonnes excluding new capacities approved by the Government of India;

(iii) Production of Calcium Carbide requires 10 M.W. of power and so, it is difficult to get so much of power in our State which has been facing power deficit;

(iv) M/s. Industrial Chemicals, Limited have also expressed the view that in the above circumstances, it may not be advisable to proceed with the scheme at present.

கோவில்பட்டி-செட்டிக்குறிச்சி பேருந்து பணி

*59 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டியிலிருந்து கட்டாலாங்குளம் செட்டிக்குறிச்சி வரை ஓடிக்கொண்டிருந்த டவுன் பஸ் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், நிறுத்தப்பட்டதன் காரணம் யாது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) குறிப்பிட்ட வழித்தடத்தில் ஓடிக்கொண்டிருந்த கோவில்பட்டி திரு. கே. பாலசுப்பிரமணியம் மோட்டார் சர்வீஸின் தற்காலிக அனுமதிச் சீட்டு 30—9—1974 அன்று முடிவடைந்து விட்டது. 1—10—1974-க்கு பிறகு தற்காலிக அனுமதி சீட்டுக்கான விண்ணப்பம் ஏதும் வரவில்லை.